ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1841/2 - 2013 දෙසැම්බර් මස 17 වැනි අඟහරුවාදා - 2013.12.17

*1841/2 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(*அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது*)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டம்***

*3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்புக்கள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன ஆகிய நான், நிதி அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி, இந்த அறிவிப்பின் மூலம் பின்வருமாறு பிரகடனப்படுத்துகிறேன் :-*

1. *செல்வந்தர்களுக்கான சாப்புத் தொகுதிகள், உயர் தரத்திலான குடியிருப்புக்கள் மற்றும் அலுவலக இடவசதிகள்/சேவை வழங்கல், இடங்கள் மற்றும் இணைந்த வசதிகளுடன் கூடிய 500 அறைகளைக் கொண்ட ஒன்றிணைந்த அதி ஆடம்பர உல்லாசப் பயணிகள் விடுமுறை விடுதி ஒன்றினை மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கொழும்பு 10, டீ. ஆர் விஜேவர்த்தன மாவத்தையில் முந்நூறு மில்லியன் அமெரிக்க டொலர்* (US $ 300 Mn.) *மொத்த முதலீட்டுடன் நிறுவிச் செயற்படுத்துவதற்கான கருத்திட்டத்தை மேற்படி சட்டத்தின் தேவைகளுக்காக செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டம் என இனங்காண்பதற்காக, அதன் குறிப்பிடத்தக்க பங்களிப்புக் காரணமாக கேந்திர முக்கியத்துவத்தை ஈர்ப்பதாக இக்கருத்திட்டம் உள்ளது.*

   (i) *அரசாங்கத்தின் அபிவிருத்தி உத்தியின் படி, பொருளாதார அபிவிருத்தியில் ஆகக் கூடிய முன்னுரிமையை ஈர்க்கும் உல்லாசப் பயணத்துறையினை ஊக்குவிப்பதற்காக,*

   (ii) *இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் கருத்திட்டக் கம்பனி ஆகியவற்றுக்கிடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ("கருத்திட்ட ஒப்பந்தம்") தேதியில் இருந்து முப்பத்தாறு (36) மாதங்களுக்குள் நாட்டுக்குள் இருநூறு மில்லியன் அமெரிக்க டொலர்* (US $ 200 Mn.) *பெறுமதியிலான வெளிநாட்டு நேரடி முதலீடு உள்ளீடு மூலமாக ;*

   (iii) *உள்நாட்டவர்களுக்கான சுமார் 2,800 தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக் கூடிய திறன் மற்றும் அதன் விளைவாக இலங்கை நாட்டு மக்களுக்கு கிட்டும் வருமானம் சம்பாதிக்கும் வாய்ப்புக்கள் ; மற்றும்*

   (iv) *செல்வந்த வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை ஈர்க்கக்கூடிய விதத்திலான சர்வதேச கீர்த்தி பெற்ற செல்வந்தர்களுக்கான சாப்புத் தொகுதிகள், உயர் தரத்திலான குடியிருப்புக்கள் மற்றும் அலுவலக இடவசதிகள்/சேவை வழங்கல் இடங்கள் மற்றும் இணைந்த வசதிகளுடன் கூடிய 500 அறைகளைக் கொண்ட ஒன்றிணைந்த அதி ஆடம்பர உல்லாசப் பயணிகள் விடுமுறை விடுதி ஒன்றினை நிர்மாணிப்பதன் மூலம் நாட்டின் புவித்தோற்றத்தை மாற்றியமைப்பதோடு அதன் விளைவாக உற்பத்தியாகக் கூடிய கணிசமான அளவு அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம்.*

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. கருத்திட்டக் கம்பனி பெயர் குயீன்ஸ்பரி லெசர் லிமிட்டெட் ஆகும். ("கருத்திட்டக் கம்பனி") கருத்திட்டத்தைச் செயற்படுத்தல் மற்றும் அதன் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்தல் இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் கருத்திட்டக் கம்பனி ஆகியவற்றுக்கிடையே கருத்திட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட தேதியில் இருந்து நாற்பத்தி எட்டு (48) மாதங்களுக்குள்ளாக அல்லது முதலீட்டுச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டவாறான நீடிக்கப்பட்ட வேறு ஒரு தேதியாகும். கருத்திட்டத்தின் அமுலாக்கக் கால கட்டம் முடிவடைந்ததைத் தொடர்ந்து கருத்திட்டத்தின் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

3. திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவில் எதிர்பார்க்கப்படுவதற்கேற்ப, இத்தால் உள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறான காலப்பகுதி/காலப்பகுதிகளில் வரி செலுத்துவதற்கான சட்டங்களில் இருந்து விலக்களிப்புக்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு ஏற்ப இணங்கியொழுகுவதின் அடிப்படையில் வழங்கப்படும் :

(i) ஒன்றிணைந்த அதி ஆடம்பர உல்லாசப் பயணிகள் விடுமுறை விடுதி ஒன்றினை மேற்கொள்வதற்கான வெளிநாட்டு நேரடி முதலீடு இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் கருத்திட்டக் கம்பனிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத் தேதியில் இருந்து முப்பத்தாறு (36) மாதங்களுக்குள் இருநூறு மில்லியன் அமெரிக்க டொலராக (US $ 200 Mn.) இருத்தல் வேண்டும் ;

(ii) பயனுறு கண்காணிப்பை உறுதிப்படுத்துவதற்காக கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட அந்நியச் செலாவணிக் கொடுக்கல் தொடர்பில் கருத்திட்டக் கம்பனி கணக்குகளைப் பேண வேண்டும்.

**அட்டவணை**

(1) **2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசிய இறைவரிச் சட்டம்**

(i) *நிறுவக வருமான வரி*

கருத்திட்ட நடவடிக்கைகளினால் உற்பத்தியாகும் இலாபம் மீது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மதிப்பீட்டு ஆண்டிலிருந்து பத்து (10) வருடக் காலப்பகுதியொன்றுக்கு 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தேசிய இறைவரிச் சட்டத்தின் வருமான வரி விதிப்பனவு தொடர்பான ஏற்பாடுகள் கருத்திட்டக் கம்பனிக்கு ஏற்புடைத்தாகாது.

கருத்திட்டக் கம்பனி வரி விதிப்பனவுக்கான இலாபங்களை ஈட்டும் முதல் ஆண்டு அல்லது கருத்திட்டத்தின் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் தேதியில் இருந்து மூன்று (3) வருடங்களில், அதில் எது முதலில் வருகிறதோ அத்தேதியில் இருந்து சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதி ஆரம்பமாகும்.

மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதியை உடன் அடுத்து பன்னிரண்டு வருடக் (12) காலப்பகுதியொன்றுக்கு கருத்திட்ட கம்பனியின் நடவடிக்கைகளினால் உற்பத்தியாகும் இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பில் அரைவாசியான ஆறு சதவீதத்துக்குச் (6%) சமமான வீதத்தில் ஒரு பகுதி விலக்களிப்பு அல்லது அக்காலகட்டத்தில் ஹோட்டல் கைத்தொழிலுக்கான வருமான வரி வீதத்தில் ஐம்பது சதவீதம் (50%) அதில் எது குறைந்ததோ, அது ஏற்புடையதாகும்.

ஆயின் மேற்சொல்லப்பட்ட வரி விலக்களிப்புக் காலப்பகுதி மற்றும் அரைவாசி வரி விலக்களிப்புக் காலப்பகுதி காலாவதியாகிய பின்னர், கருத்திட்டத்தின் இலாபங்கள் மற்றும் வருமானம் தொடர்பில் அக்காலத்தில் அமுலில் இருக்கும் தேசிய இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வருமான வரி செலுத்தப்படல் வேண்டும்.

தோதான சட்டங்களினால் மேவப்பட்ட கருத்திட்ட நோக்கெல்லையை விஞ்சி கருத்திட்டக் கம்பனி அதன் நடவடிக்கைகளை விசாலிக்கும் பட்சம், அத்தகைய நடவடிக்கைகள் மூலம் கிடைக்கப்பெறும் இலாபங்கள் மீது வர்த்தகத்தின் மொத்த அளவு தொடர்பான இலாபத்துக்கு ஏற்றவாறு திருத்தப்பட்ட வீதத்தில் இறைவரிச் சட்டத்துக்கேற்ப நிறுவக வருமான வரி செலுத்தல் ஏற்புடைத்தாகும்.

(ii) *பங்கு இலாபங்கள் மீதான வரி*

வரி விலக்களிக்கப்பட்ட பத்து (10) வருடக் காலப்பகுதியில் மற்றும் அதன் பின்னர் ஒரு (01) வருடத்துக்கு பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும் பங்கு இலாபங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.

(iii) *தடுத்து வைக்கும் வரி*

*கருத்திட்டக் கம்பனிக்கு பின்வரும் விடயங்கள் தொடர்பில் தடுத்து வைக்கும் வரி அறவிடுதல் மற்றும் செலுத்துவதிலிருந்து விலக்களிப்பு வழங்கப்படும்.*

*மூலதனச் செலவுக்காகப் பெறப்பட்ட வெளிநாட்டு கடன்கள் மீதான வட்டி மற்றும் உசாத்துணையாளர்களுக்கு செலுத்தப்பட்ட தொழில்நுட்பக் கட்டணங்கள் ;*

*முகாமைத்துவக் கட்டணங்கள் மற்றும் பங்குவீத உரிமைக் கொடுப்பனவுகள் ஆயின் அத்தகைய கட்டணங்களின் மொத்தத் தொகை மொத்த செயற்பாட்டு வருமானத்தின் மூன்று சதவீதத்தை (3%) விஞ்சாமலிருத்தல் வேண்டும் ;*

*சந்தைப்படுத்தும் கட்டணங்கள் மீது ஆயின் மொத்த செயற்பாட்டு வருமானத்தின் ஒன்று தசம் ஐந்து (1.5%) வீதத்தை அத்தகைய மொத்தக் கட்டணங்கள் விஞ்சாமலிருத்தல் வேண்டும் ;*

*ஊக்குவிப்பு முகாமைத்துவக் கட்டணங்கள் மீது ஆயின், அத்தகைய கட்டணங்களின் மொத்த செயற்பாட்டு வருமானத்தின் பத்து சத வீதத்தை (10%) விஞ்சாமலிருத்தல் வேண்டும்.*

(iv) *நீ. உ. செ. வரி*

*கருத்திட்டக் கம்பனியின் வெளிநாட்டு ஊழியர்களுக்கு நீ. உ. செ. வரி செலுத்துவதில் இருந்து விலக்களிப்பு வழங்கப்படும் என்ற போதிலும் இச்சலுகை ஆகக்கூடிய ஊழியர்கள் இருபது பேர்களுக்கு (20) மட்டுப்படுத்தப்படும். வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட தேதியில் இருந்து ஐந்து (05) வருடங்களுக்கு இச்சலுகை ஏற்புடைத்தாகும். கருத்திட்டக் கம்பனி சிறந்த முயற்சியின் அடிப்படையில் படிப்படியாக உள்நாட்டு ஊழியர்களை அதன் வெளிநாட்டு ஊழியர்களுக்கு பகரமாக நியமிக்க வேண்டும்.*

*2.* ***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர்பெறுமதி வரிச் சட்டம்***

*கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மற்றும் கருத்திட்டம் தொடர்பான ஏதும் பொருட்களின் அல்லது சேவைகளின் உள்நாட்டு கொள்வனவுகள் கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான நாற்பத்தெட்டு (48) மாதங்களுக்கு சேர்பெறுமதி வரி செலுத்துவதில் இருந்து விலக்களிக்கப்படும். சேர்பெறுமதிச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டவாறு கருத்திட்டத்தின் ஏதும் ஒப்பந்தக்காரர் அல்லது அத்தகைய ஒப்பந்தக்காரருக்கு பொருட்களை வழங்கும் உப ஒப்பந்தக்காரர் பிற்போடப்படுவதற்குத் தகுதி பெறுவார்.*

*மேற்கூறியவற்றுக்கு அடிபணிவாக, 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அச்சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு வழங்கல்களின் பெறுமதி மீது கருத்திட்ட கம்பனி சேர் பெறுமதி வரி செலுத்த வேண்டியிருக்கும்.*

*3.* ***துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி விதிப்பனவுச் சட்டம்***

*கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதிக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில், கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மீது துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி கொடுப்பனவு மற்றும் விதிப்பனவில் இருந்து கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான நாற்பத்தெட்டு (48) மாதங்களுக்கு கருத்திட்ட கம்பனிக்கு விலக்களிப்பு வழங்கப்படும். கருத்திட்டத்துக்காக கருத்திட்டக் கம்பனி நேரடியாக மேற்கொள்ளும் இறக்குமதிகளுக்கு அல்லது கருத்திட்டத்துக்காக ஒப்பந்தக்காரர் ஒருவர் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவர் மேற்கொள்ளும் இறக்குமதிகளுக்கும், கீழே விடயம் 5 இல் குறிப்பிடப்பட்ட அதே நிபந்தனைகள், அத்தகைய பொருட்களைப் பெறுபவர் கருத்திட்டக் கம்பனியாக இருக்கும் வரை, இந்த விலக்களிப்பு ஏற்புடைத்தாகும்.*

*4.* ***2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம்***

*கருத்திட்டக் கம்பனியின் ஒப்பந்தக்காரர்/ஒப்பந்தக்காரர்கள் கருத்திட்டம் தொடர்பாக திருத்தப்பட்டவாறான 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் கட்டிடக் கைத்தொழில் உத்தரவாக நிதி விதிப்பனவில் இருந்து கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான நாற்பத்தெட்டு (48) மாதங்களுக்கு விலக்களிப்பு அளிக்கப்படும்.*

5. **கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் இறக்குமதி மீதான சுங்கத் தீர்வை (235 ஆம் அத்தியாயமான சுங்கக் கட்டணச் சட்டம்)**

கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான நாற்பத்தெட்டு (48) மாதங்களுக்குள் எதிர்மறை பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைத் தவிர சகல கருத்திட்டம் தொடர்பான மூலதனச் சுபாவத்தைக் கொண்ட பொருட்கள் மற்றும் சபையினால் அனுமதிக்கப்பட்டவாறு வேறு ஏதும் கருத்திட்டம் தொடர்பான பொருட்கள் கருத்திட்டத்தின் தேவைக்காக கம்பனியினால் அல்லது ஒப்பந்தக்காரர்கள் அல்லது உப ஒப்பந்தக்காரர்கள் மூலம் இக்கருத்திட்டத்தின் தேவைக்காகப் பிரத்தியேகமாக கருத்திட்டத்தைச் செயற்படுத்தும் கம்பனியின் பெயரில் இறக்குமதி செய்யப்படுமாயின் அப்பொருட்கள் தொடர்பிலும் சுங்கக் கட்டண விலக்களிப்பு ஏற்புடைத்தாகும். ஆயினும், அத்தகைய பொருட்கள் அளவிலும் தரத்திலும் கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக நேரகாலத்துக்கு ஏற்றவாறும் இலங்கையில் முழுமையாக உற்பத்தி செய்யப்படாத மற்றும் உள்நாட்டு சந்தையில் கிடைக்காத பட்சம் மாத்திரம் எதிர்மறை பட்டியலில் உள்ள பொருட்களுக்கும் சுங்கக் கட்டணத்தில் இருந்து விலக்களிக்கப்படும்.

இவ்வாறாக, மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கமைய கருத்திட்ட அமுலாக்கக் காலப்பகுதியான நாற்பத்தெட்டு (48) மாதங்களுக்குள் பொதுவாக கருத்திட்டம் சம்பந்தப்பட்ட பொருட்களை ஒப்பந்தக்காரர் ஒருவர் அல்லது உப ஒப்பந்தக்காரர் ஒருவர் மூலமாக அத்தகைய பொருட்களைப் பெறுபவர் கருத்திட்டக் கம்பனி எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் மாத்திரம் இறக்குமதி செய்ய முடியும். எனவே, அத்தகைய ஏற்றுமதிகள் வேறு ஏதும் இறக்குமதிகளுடன் சேர்த்துச் செய்யப்பட்டிருப்பின், கருத்திட்டக் கம்பனியின் கருத்திட்டம் தொடர்பான பொருட்களுக்கு மாத்திரம் அத்தகைய சலுகைகள் கிடைக்கும் என்பதை உறுதிப்படுத்துவது கருத்திட்டக் கம்பனியின் முழுமையான பொறுப்பாகும். ஏதும் ஒரு காரணத்துக்காக இந்நிபந்தனை மீறப்பட்டிருந்தால், கருத்திட்டத்துக்கான கருத்திட்டம் தொடர்பான பொருட்களின் பகுதியாக அல்லாத சகல பொருட்களுக்கும் அச்சந்தர்ப்பத்தில் அமுலில் இருக்கும் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளின் கீழ் வரிகள் மற்றும் கட்டணங்கள் ஏற்புடைத்தாகும் என்பதோடு உடனடியாக அவ்வரிகள் செலுத்தப்பட வேண்டும். ஏதும் ஒரு ஊழியர், உசாத்துணையாளர் அல்லது கருத்திட்டக் கம்பனியின் ஏதும் நபரின் சொந்த/ பிரத்தியேகத் தேவைக்காக கருத்திட்டக் கம்பனியினால் இறக்குமதி செய்யப்படும் சொந்தப் பாவனைக்கான பொருட்கள் கருத்திட்டம் தொடர்பான பொருட்கள் எனக் கணிக்கப்படமாட்டாது என்பது கவனிக்கத் தக்கதாகும். கருத்திட்டம் கம்பனிக்கு 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள விலக்களிப்புக்கள்/சலுகைகள் காரணமாக, கருத்திட்டக் கம்பனியுடன் சம்பந்தப்பட்டிருக்கும் ஏதும் வாடகையாளர் அல்லது வேறு தரப்பினருக்கு அத்தகைய சம்பந்தம் காரணமாக அல்லது அதன் விளைவாக ஏதும் விலக்களிப்புக்கள் அல்லது சலுகைகள் வழங்கப்படமாட்டாது என்பது மேலும் கவனிக்கத்தக்கதாகும்.

லக்ஷ்மன் யாபா அபேவர்த்தன, பா.உ.,
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,

கொழும்பு.
2013, திசெம்பர் 17.

1-05

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.